ஒரு நல்ல நிலையிலான தீயணைப்பு நிலையத்தைக் கட்டித் தந்து பழுதடைந்த இயந்திரங்கள் இல்லாமல் நல்லவிதமான இயந்திரங்கள் கொடுக்கின்ற வகையிலேயும் ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து தீயணைப்பு வீரர்கள் போர் வீரர்களைப் போல் பணியாற்றக்கூடியவர்கள். வெள்ளமாக இருந்தாலும், புயலாக இருந்தாலும், தீப்பற்றிக்கொண்டாலும் அவர்கள் தங்களுடைய உயிரைப் பணயம் வைத்து மக்களைக் காப்பாற்றுகின்றவர்கள். ஆகவே அரசு காவல் துறையினருக்கு எப்படிச் சலுகைகளை வழங்குகின்றதோ அதே போன்று அந்த தீயணைப்புப் படை வீரர்களுக்கும் சலுகைகளை வழங்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். வாழ்க தமிழக அரசு, வாழ்க புரட்சித் தலைவர் என்று சொல்லி வாய்ப்பு தந்த தலைவருக்கு நன்றி சொல்லி, என் உரையை நிறைவு செய்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை 24-3-1982 காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-29 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

6. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

எதுவுமில்லை.

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

144. 1981-82 ஆம் ஆண்டு கூடுதல் செலவுக்கான துணை மானியக் கோரிக்கைகளும், விரிவான துணை மதிப்பீடுகளும் (தமிழ், ஆங்கிலம்).

145. 1981-82 ஆம் ஆண்டில் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கை களின் அறிவிப்பு (தமிழ், ஆங்கிலம்).

146. 1981-82 ஆம் ஆண்டு இறுதித் துணை மதிப்பீடுகள் பற்றிய மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்களின் உரை (தமிழ், ஆங்கிலம்).

TRUTH ALONE TRIUMPHS